# சம்பந்தசரணாலயரின் தத்துவவிளக்கமும் ஸ்ரீ காசிவாசிசெந்திநாதையரின் உரைச் சிறப்புக்களும்

பொ. சந்திரசேகரம்

**ஆய்வுச்சுருக்கம்**

*சம்பந்தரின் தாய்மாமன் சம்பந்தசரணாலயரால் எழுதப்பட்ட தத்துவ விளக்கமானது சைவசித்தாந்த விளக்கவிருத்திக்கு இன்றியமையாத நூலாக உள்ளது. இதற்கு யாழ்ப்பாணம் குப்பிளானைச் சேர்ந்த ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் மிக விரிவான உரை எழுதியுள்ளார். இவ்வகையில் இந்நூலும் அதனது உரையும் வடமொழி, தமிழ் மொழி மூலமான சைவசித்தாந்த விளக்கத்தைப் பெறுவதற்கு அவசியமானதாக உள்ளது என்பதுடன் சைவசித்தாந்தப் பேராசிரியர் எனத்தக்க மதுரைச் சிவப்பிரகாசர் உட்பட்ட பல அறிஞர்கள் இந்நூலினை மேற்கோளாக எடுத்தாண்டுள்ளனர். இந்நூலின் ஆசிரியர் பற்றியும், அவரது காலம் பற்றியும் மாறுபட்ட கருத்துக்கள் கூறப்பட்டுள்ளமையால், இந்நூல் கூறும் பொருள் மரபு பற்றி ஆராய்வதன் ஊடாக நூலாசிரியர் மற்றும் அவரது காலம் பற்றி ஒரு தெளிவான முடிவை அறிவதற்கு ஏதுவாக இருக்கும் என்பது மட்டுமன்றி உரையாசிரியர் ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் தரும் கருத்துக்கள் சைவசித்தாந்த மாணவர்களுக்கு சித்தாந்த நுண்பொருள்கள் பற்றி அறிவதற்கு பெரிதும் உதவியாக அமையும் எனக் கருதலாம். இவ்வகையில் தத்துவவிளக்கத்தினையும் அதனது உரையினையும் அடிப்படையாகக் கொண்டு நூலாசிரியர், அவரது காலம், அது கூறும் பொருள் மரபு பற்றிய முக்கிய அம்சங்களையும் விளக்குவதாக இவ்வாய்வு அமைகின்றது.*

**திறவுச்சொற்கள் :** தத்துவம், சம்பந்தசரணாலயர், சீர்காழி, சிவாகமம்

**அறிமுகம்**

சைவசித்தாந்த சாஸ்திர வரலாற்றில் மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் தலைமையானது என்ற வகையில் சிவஞான போதம் உட்பட்ட பதினான்கு சாஸ்திரங்களையும், மெய்கண்ட சாஸ்திரம் என வழங்குவதோடு, சைவசித்தாந்தத்தின் தோற்றம் பற்றி ஆராயும் சித்தாந்த அறிஞர்கள் மெய்கண்டாரின் சிவ ஞானபோதம் தோன்றுவதற்கு முற்பட்ட காலத்தை சைவசித்தாந்தத்தின் தோற்ற காலம் எனக்கொண்டே விளக்கியுள்ளனர். இதற்குக் காரணம், சைவசித்தாந்த சாஸ்திர வரலாற்றில் முதன்முதலில் சிவஞானபோதமே அளவையியலை அடிப்படையாகக்கொண்டு தர்க்க ரீதியில் சைவ சித்தாந்தத்திற்கு முழுமையான வடிவம் கொடுக்க முற்பட்ட நூல் என்பதுடன், இந்திய மெய்யியலில் சூத்திர இலக்கியங்களை மூலமாகக்கொண்டு வளர்ந்த அறுவகைத் தரிசன மரபுக்குச் சமமாக மெய்கண்டார் சிவஞானபோத சூத்திரத்தை இயற்றி சைவசித்தாந்தத்தை இந்திய மெய்யியல் முழுமைக்குமுரிய விவாதப்பொருளாக்கினார் என்பதாகும். இத்தகைய பின்னணியில் சிவஞான போதத்திற்கு முற்பட்ட ஆகம சாஸ்திரத்தை மூலமாகக்கொண்ட சைவசித்தாந்த மரபு அகில இந்தியா எங்கும் செழிப்பாக இருந்துள்ளமையை தத்துவ விளக்கம், ஞானாமிர்தம் போன்ற தமிழ் நூல்களும், மிருகேந்திரம், மதங்கம், சுவாயம்புவம், பௌஷ்கரம் போன்ற சிவாகமங்களும், சிவாகமங்களின் சார்புநூல்களான தத்துவப்பிரகாசிகை, தத்துவ சங்கிரகம் முதலான அஷ்டப்பிரகரண நூல்களும் சான்றாக விளங்குகின்றன. இந்நூல்கள் சைவசித்தாந் தத்திற்கு மாறான கொள்கைகளை அளவையியல் ரீதியிலும் தர்க்க ரீதியிலும் மறுப்பதில் ஓரளவு வெற்றி பெற்றன. குறிப்பாகப் பௌத்தம், சமணம், உலகாயதம் போன்ற வேதமறுப்புச் சிந்தனை களையும் ஏகான்மவாதம், சாங்கியம் போன்ற வேதச் சிந்தனைகளையும் பூர்வபட்சம் - சித்தாந்தம் என்ற வாத அடிப்படையில் மிகக்கடுமையாக மறுத்திருத்தல் காணலாம். இத்தகைய பின்னணியில் சிவாகமக்கருத்தை மூலமாகக்கொண்டு பதி, பசு, பாசம் என்ற முப்பொருளுண்மையை விளக்கும் தமிழ்ச் சாஸ்திர நூல்களில் ஒன்றாக விளங்கும் தத்துவவிளக்கம் என்ற நூல் மெய்கண்ட சாஸ்திரங்களுக்கு முற்பட்ட சைவசித்தாந்த

மரபின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளது. மேலும் இந்நூலிற்கு யாழ்ப்பாணம் குப்பிளானைச்சேர்ந்தவரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் முதன்மை மாணவர்களில் ஒருவருமாகிய ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் மணிப்பிரவாளநடையில் உரை வரைந்துள்ளார். இவ்வுரையானது வடமொழி நூல்களில் இருந்து அதிகமான ஆதாரங்களைத் தருவதுடன் தமிழ் நூல்களையும் மேற்கோளாகத் தருகின்றது.

### ஆய்வு மூலங்களும், ஆய்வு முறையியலும்

இவ்வாய்வின் முதல்நிலைத்தரவாக சம்பந்த சரணாலயரின் தத்துவவிளக்கமும், ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் இயற்றிய உரையும் பயன்படுகின்றன. இரண்டாம் நிலைத்தரவாக போஜதேவர் எழுதிய "தத்துவப்பிரகாசிகையும்", மு. அருணாசலம் எழுதிய "தமிழிலக்கியவரலாறு - பதினான்காம் நூற்றாண்டும்" பயன்படுத்தப்படுகின்றன. மேலும் இங்கு சம்பந்தசரணாலயர் பற்றி ஆராயும் வரலாற்று ஆய்வு முறையியலும், தத்துவங்கள் பற்றி விளக்கும் விவரண ஆய்வு முறையியலும், தத்துவவிளக்கத்தை ஏனைய சாஸ்திரநூல்களுடன் ஒப்பிட்டு ஆராயும் ஒப்பியலாய்வு முறையும் பயன்படுத்தப்படுகின்றன.

### ஆய்வுப்பிரச்சினை

இவ்வாய்வில் பல ஆய்வுப்பிரச்சினைகள் உள்ளன. அவற்றுள் ஒன்று தத்துவவிளக்கத்தின் ஆசிரியராக இருவர் கூறப்படுகின்றனர். ஒருவர் கண்ணுடைய வள்ளல். மற்றையவர் சம்பந்த சரணாலயர். சம்பந்தசரணாலயர் என்று கூறுபவர்களிலும் அவர் சம்பந்தரின் மாமன் என்று ஒரு சாராரும் சம்பந்தமுனிவனின் மாணவன் என்று மற்றொரு சாராரும் கூறுவர். அவ்வாறே நூல் இயற்றப்பட்ட காலமும் இற்றைக்கு நான்காயிரம் வருடங்களிற்கு முன்னர், கி.பி 7 ஆம் நூற்றாண்டு, கி.பி 14 ஆம் நூற்றாண்டு என்ற கருத்துள்ளது. மேலும் தத்துவவிளக்கத்தினைத்தழுவியே வடமொழியில் போஜதேவர் தத்துவப்பிரகாசிகை எழுதினார் என்று ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் கூறியுள்ளார். இவ்வகையான ஆய்வுப்பிரச்சினைகளின் பின்னணியில் தத்துவவிளக்கம் திருஞானசம்பந்தரின் மாமன் சம்பந்தசரணாலயரால் இயற்றப்பட்டு, முப்பொருள் உண்மையை எடுத்துரைப்பது என்பதை ஆய்வின் கருதுகோளாகக்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

### நூலாசிரியரும் காலமும்

தத்துவவிளக்க நூலின் ஆசிரியர் சம்பந்த சரணலாயர் என்பதை இந்நூலின் உரையாசிரியர் ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர், தமது முன்னுரையில் (உபோற்காதத்தில்) குறித்துள்ளார். மேலும், இந்நூலில் இடம்பெறும் சம்பந்தசரணாலயர் துதியாக வரும் "எம்பந்த பாசமறக் காழிவந்த என் துணைவ" எனத் தொடங்கும் பாடலில் "சம்பந்தசரணாலயன் தன் பாதம்" என வருவதால் சீர்காழியில் அவதரித்த ஸ்ரீ திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய தமிழ்வேதமாகிய தேவாரத்தை எழுதும் பேறுபெற்றவரும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் மாமனாருமாகிய சம்பந்தசரணலாயரே இத் தத்துவவிளக்க நூலின் ஆசிரியர் என்பது புலப்படுத்தப்படுகின்றது. சேக்கிழார் இவரை "அருமுறை சொல் திருப்பதிகம் எழுதும் அன்பர்" (பெரியபுராணம், 2811) எனக்குறித்துள்ளமை காணலாம். மேலும் போதிமங்கை என்ற இடத்தில் புத்தநந்தியின் தலை இடிவிழுந்து அறுமாறு செய்தவரும், அங்குள்ள புத்தசமயத்தவர்களோடு வாதிட்டு சைவசமயமே உண்மைச்சமயம் என நிறுவியவரும் இச்சம்பந்தசரணாலயரே என்பதைச் சேக்கிழார் பெரியபுராணத்தில் "தலையும் மெய்யும் அற்றுவிழ அத்திரவர்க்கு அதனால் அன்பர் அறுத்ததுவும்" (பெரியபுராணம், 2813) என்கின்றார்.

மேலும் தமிழிலக்கிய வரலாறு எழுதிய மு.அருணாசலம் சீர்காழி சிற்றம்பல நாடிகளின் மாணாக்கரான சம்பந்த முனிவரிடத்தில் இருந்த பல சீடருள் சம்பந்தசரணாலயர் முக்கிய மாணாக்கர் என்றும், அவரே தத்துவவிளக்கத்தை இயற்றியவர் என்றும் குறிப்பிடுகின்றார்[1]. மேலும் கி.பி 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தரின் தாய்மாமன் சம்பந்தசரணாலயர் வேறு எனவும் அறுதியிட்டு உரைக்கின்றார். எனினும் திருஞானசம்பந்தர் பற்றி தனது பதிகங்களில் புகழ்ந்துரைக்கும் கண்ணுடைய வள்ளல் இந்நூலை எழுதினார் என்பதை மறுத்துரைக்கின்றார். எவ்வாறாயினும் 15 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த

களந்தை ஞானப்பிரகாசபண்டாரம் என்பவர் செய்த சந்தான அகவல் என்ற ஓர் அகவற்பாவில் தத்துவவிளக்கத்தின் 49 ஆவது பாடலான "இல்லாதன பிறந்துள்ளன" என்னும் பாட்டினை எடுத்துக்காட்டி நல்ல சம்பந்தசரணாலயன் உரைத்தனன் என அருளினார்.[2] எனவே சம்பந்த சரணாலயர் தத்துவவிளக்கத்தை எழுதினார் என்பதில் அறிஞர்களுக்குக் கருத்து வேறுபாடு இல்லை. மு.அருணாசலம் சம்பந்தமுனிவனின் மாணவன் சம்பந்தசரணாலயர் தத்துவவிளக்கத்தை அருளினார் என்பதற்குத் தருகின்ற சான்றுகளில் உண்மை இருப்பதாகத் தெரியவில்லை. குறிப்பாக கி.பி 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கூறப்படும் சம்பந்தசரணாலயரிடம் கல்விபயின்ற மாணவன் ஒருவர் தான் தத்துவப்பிரகாசப் பதிப்பில் உள்ள சம்பந்தசரணாலயர் துதியாக அமைந்த பாடலை அருளிச் செய்தார்.[3] எனவே கி.பி 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்த சரணாலயரே தத்துவவிளக்கத்தை அருளினார் என்பர். எனினும் இப்பாடலில் திருநெறி விளக்க முடையார் கி.பி 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தசரணாலயர் பற்றியோ, அவரின் குருவாகிய சம்பந்த முனிவர் பற்றியோ, அவரின் குருவாகிய சிற்றம்பலநாடி பற்றியோ எதுவும் கூறவில்லை என்பதுடன் திருஞானசம்பந்தரின் மாமனார் சம்பந்தசரணாலயரே தத்துவவிளக்கத்தை அருளினார் என்பதை தெளிவாக குறித்துள்ளார். மேலும், தத்துவவிளக்கப் பாடல்களில் வரும் அகச்சான்றுகளும் நூலாசிரியருக்கும் திரு ஞானசம்பந்தருக்குமான தொடர்பைப் பிரதி பலிப்பதனால்திருஞானசம்பந்தரின் மாமனாராகிய சம்பந்தசரணாலயரே தத்துவவிளக்கம் அருளினார் என்பது தெளிவான முடிவாகின்றது.

அடுத்து, சம்பந்தசரணாலயர் பற்றி அறியப் படுகின்ற முக்கிய செய்திகள்.

01. திருஞானசம்பந்தரின் மாமனாரே திருஞான சம்பந்தர் பாடும் தேவாரங்களை எழுதுபவர்.
02. திருஞானசம்பந்தர் அருளிய "புத்தர் சமண் கழுக்கையர்" எனத் தொடங்கிவரும் அஸ்திர வாக்கை புத்தநந்தி என்பவன் மேல்விடுத்து அவன் சிரத்தை அறுத்தவர்.
03. போதிமங்கையில் சாரிபுத்தன் தலைமையில் வந்த புத்தர்களோடு தர்க்கவாதம் செய்து அவர்களுக்குச் சைவசமயத்தினதும், தத்துவக் கொள்கையாகிய சைவசித்தாந்தத்தினதும் உண்மையை நிலைநாட்டி, அச்சமயமும் அதனது தத்துவக் கொள்கையுமே முத்திக்கு சரியான வழி என நிலைநாட்டி, அவர்களை எல்லாம் சைவசமயிகளாக ஆக்கியவர்.
04. வடமொழி, தமிழ் ஆகிய இருமொழிகளிலும் சிவாகமங்களின் ஞானபாதத்தில் மிகுந்த புலமைமுடையவர்.
05. வேதத்தினதும், சிவாகமங்களின் ஞானபாதத் தினதும் சாரமாகத் "தத்துவவிளக்கம்" என்ற தமிழ் சாஸ்திர நூலை அருளிச்செய்தவர்.
06. திருஞானசம்பந்தரோடு ஆச்சாபுரம் எனப்படும் "திருநல்லூர்ப் பெருமணத்திற்" தோன்றிய சோதியில் கலந்தருளியவர் என்பனவாகும்.

இலக்கிய ஆதாரங்களின் அடிப்படையில் சம்பந்தசரணாலயர் துதியாக அமையும் பாடல் அமைந்துள்ள திருநெறிவிளக்கம் என்னும் நூலின் காலமானது,கி.பி1400-1425என்று திட்டவட்டமாக அறியப்படுவதனால், தத்துவவிளக்கம் கி.பி 14ஆம் நூற்றாண்டு அல்லது அதற்கு முற்பட்ட நூல் என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.[4] மேலும், இந்தத் தத்துவவிளக்க நூலாசிரியராகிய சம்பந்தசரணாலயரின் காலம் ஏறக்குறைய 4000 ஆம் வருடத்திற்கு முற்பட்டது என்பது ஸ்ரீ காசிவாசி செந்திநாதையரின் கருத்தாகும். இவர் தம் கருத்திற்கு ஆதாரமாக ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை எழுதிய அபிதானகோசத்தில் கூறப்படும் கால ஆராய்ச்சி பற்றிய விடயங்களைத் தருகின்றார். ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை சம்பந்தர், அப்பர் என்போரது தேவாரங்களை அகச்சான்றாகவும், மேலும் சில புறச்சான்றுகள் உட்பட ஐந்து முக்கிய காரணங்களை வைத்து சம்பந்தர் காலம் ஏறத்தாழ நாலாயிரம் வருடங்களிற்கு முற்பட்டது என்பதை நிறுவ முற்படுகின்றார். எனினும் அவர் தரும் காரணங்கள் சம்பந்தர் காலம் பற்றி வரலாற்று ஆசிரியர்கள் தரும் காலவாராய்ச்சியோடு எவ்விதத்திலும் பொருந்தி வரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. உதாரணமாக, சந்துசேனன், இந்துசேனன், தருமசேனன், கந்துசேனன், கனகசேனன் முதலியோர் சம்பந்தர் காலத்தில் விளங்கிய சமணாசாரியார்கள் என்பது அவருடைய தேவாரத்தாற் பெறப்படும்.

அவர்களின் பெயர்கள் இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்களுக்கு உட்பட்ட சமண சரித்திரங்களிலே கேட்கப்பட்டமையின் அவ்வாசாரியர்கள் முற்பட்டவர்களேயாதல் வேண்டும். ஆகவே சம்பந்தரும் முற்பட்டவரேயாதல் வேண்டும் என்கின்றார்.[5] மேலும் இரண்டாயிரத்து எண்ணூறு வருடங்களுக்கு முன்னே விளங்கிய சங்கராச்சாரியார் தாம் செய்த சௌந்தரியலஹரியிலே சம்பந்தரை எடுத்துத் துதித்தலால் சம்பந்தர் அவருக்கு முன்னுள்ளவர் என்பது பிரத்தியட்சம் எனக்குறிப் பிடுகின்றார்.[6] எனினும் தென்னிந்திய வரலாறு எழுதிய கே.என் நீலகண்டசாஸ்திரிகள் போன்றோர் சங்கரரது காலம் கி.பி எட்டாம் நூற்றாண்டு என்றும், சம்பந்தரது காலம் ஏழாம் நூற்றாண்டு என்றுமே எழுதியிருக்கின்றனர். எவ்வாறாயினும் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை தரும் வேறு சில சான்றுகளும் ஆராயத்தக்கனவாயினும், நவீன ஆய்வியல் செல்நெறி, கல்வெட்டுச்சான்று போன்ற ஆதாரங்களும் வழங்குகின்ற முக்கியத்துவத்தின் அடிப்படையில் சம்பந்தரின் சமகாலத்தவரும், சம்பந்தர் சோதியுட் கலந்தபோது அவருடன் சோதியுட் கலந்தவருமாகிய சம்பந்தசரணாலயர் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனக் கருத முடியும். அடுத்து தத்துவவிளக்கம் சம்பந்தர் காலத்தைச் சார்ந்த மிகப்பழைய நூல் என்பதற்கு ஆதாரம் பிற்காலச் சித்தாந்த சாஸ்திர நூல்களில் விநாயகர் வணக்கம் இடம்பெற்றது போல, இந்நூலில் இடம்பெறவில்லை என்பதாகும். பிரமபுரீசர் வணக்கமாக அமையும் இந்நூலின் முதலாவது செய்யுள் "கொச்சை மன்னவன் தாள் இத்தத்துவிளக்கம் பகர்வான் பணிந்து ஏத்துமே" எனக்கூறப்பட்டுள்ளது.

### நூலமைப்பு

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளுண்மையை எடுத்துக்கூறும் தத்துவவிளக்கம், வடமொழியில் உள்ள 51 அட்சரங்கள் போல, சம்பந்தசரணாலயர் துதி நீங்கலாக 51 கட்டளைக் கலித்துறை கொண்ட சிறுநூல் முதலில் சம்பந்தசரணாலயர் துதியும் அதன்பின் முறையே பிரமபுரீசர் வணக்கம், சிவனடியார் பெருமை, இந்நூல் முதல்நூலாகிய சிவாகமங்களில் இருந்து வழிநூலாகச் செய்யப் பட்டது என்பதும், ஞானாசிரியர் துதி என்பனவும் இடம்பெறுகின்றன. அதன் பின்னர் பதி, பசு, பாசம் என்கின்ற முப்பொருளின் இலக்கணம் எடுத்துக்கூறப்படுகின்றன. இம்முப்பொருள் இலக்கணத்தை விளக்கும் பகுதியை உரையா சிரியர் பதிவியல், பசுவியல், பாசவியல் என மூன்று இயல்களாக பிரித்து விளக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வியல்களுள் பதிலக்ஷணம், சத்திலக்ஷணம், காரணத்திரயம், சிவனும் சக்தியும் பந்தத்திற்கும் வீட்டிற்கும் காரணம், பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளுண்மை, பஞ்சகிருத்தியம் முதலாக முத்திவரை நாற்பத்தொன்பது வரையான பொருட்கூறுகள் விளக்கப்படுகின்றன.

காழி எனப்படும் சீர்காழிக்கு பன்னிரண்டு பெயர்கள் உள்ளன. பன்னிரண்டு கடல்கோளால் தாக்கப் பெற்றும் அழியாது இருக்கப்பெற்றது என்பர். சீர்காழிக்குரிய இப்பன்னிரண்டு பெயர் களையும் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் தமது தேவாரத்தில் சிறப்பாக பன்னிரண்டு பாடல்களை உள்ளடக்கிய பதிகத்தாலும் மற்றுமுள்ள பதிகங்களாலும் சிறப்பித்துள்ள அதேநேரம், சேக்கிழார் பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் வரலாற்றைக் கூறும்போது சீர்காழிக்குரிய பன்னிரண்டு பெயர் களையும் எடுத்துக்காட்டியுள்ளார். அவை பிரமனூர், வேணுபுரம், புகலி, வெங்குருகு, தோணி புரம், பூந்தராய், சிரபுரம், புறவயம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலம் என்பவாகும்.

திருஞானசம்பந்தர் பன்னிரண்டு பேர்களை உள்ளடக்கியதாக சீர்காழியைப்பாடும்போது தான்பாடும் பதிக வரன்முறைக்கு அப்பால் பன்னிரண்டு பாடல்களை உள்ளடக்கிப்பாடுவதுடன், ஒவ்வொரு பாடலிலும் பன்னிரண்டு பெயர்களில் ஒவ்வொரு பெயரை முதலில் தொடங்கி பின்னர் ஒழுங்குமுறையில் ஒவ்வொன்றாகப் பாடுவது குறிப்பிடத்தக்கது. மேலும் ஒரு பெயரை ஒரு பாடலிலும் அமைத்துப் பாடியுள்ளார். பிரமனூர் வேணுபுரம் புகலி வெங்குருகுப் பெருநீர்த் தோணி, புரமன்னு பூந்தராய் பொன்னஞ் சிரபுரமும் புறவயஞ் சண்பை, அரன்மன்னு தண்காழி கொச்சையம் உள்ளிட்டங்கு ஆதியாய, பரமனூர் பன்னிரண்டாய் நின்றதிருக் கழுமலம் நாம் பரவுமூரே. (சம்பந்தர் தேவாரம், 2:70:1)

இவ்வாறு பன்னிரண்டு பாடல்கள் அமையும் இக்கருத்தினை உள்வாங்கிச் சேக்கிழாரும் "பிரமபுரம் வேணுபுரம் புகலி பெரு வெங்குரு நீர்ப், பொருவில்திருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன், வருபுறவஞ் சண்பை நகர் வளர்காழி கொச்சைவயம், பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்" (பெரியபுராணம், **1917**) என்கின்றார். சீர்காழிக்குள்ள பன்னிரண்டு பெயர்களில் தத்துவவிளக்க ஆசிரியர் காழியை ஆறுதரமும், வெங்குருகு, சொச்சை என்பவற்றை இரண்டுதரமும் சிரபுரம், கழுமலம், பிரமபுரம் என்பவற்றை ஒருதரமும் எல்லாமாக ஆறு பெயர்களைத் தமது பாடல்களில் குறித்துள்ளார். உரையாசிரியர் ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் இரண்டு புராணக்கதைகளை எடுத்துக்காட்டி, சீர்காழிப்பதியின் சிறப்பை எடுத்துக்காட்டியதுடன் கழுமலம், கொச்சை என்ற பெயர்வந்த காரணத்தையும் விளக்கியுள்ளார். இதில் சிவபெருமான் உரோமசமுனிவருக்கு நயனதீக்கை செய்து சிவஞானோபதேசம் வாயிலாக அவரது ஆணவ மல மறைப்பை நீக்கி பரமுத்தியை வழங்கி நிர்மலமாக்கியமையால் நிர்மலபதி என்ற காரணப் பெயர் ஏற்பட்டது. நிர்மலபதி என்பதுதான் கழுமலநகர் என வழங்கப்பெறுகின்றது.[7], அடுத்து, பராசமுனிவர் யமுனாநதியில் ஓடம்செலுத்தும் மற்சகந்தியில் மயங்கி வியாசரைப்பெற்றபின், இது மயக்கத்தினால் நிகழ்ந்தது என்பதை அறிந்து பூலோககைலாசமாகிய சீர்காழியிலே சிவலிங்கதாரணம் செய்ததனால் ஏற்பட்ட சிவன் அருளால் அவரது அஞ்ஞானமாகிய கொச்சையம் போக, சிவனிடம் கொச்சை என்ற பெயர் இத்தலத்திற்கு ஏற்பட வேண்டும் என்று வேண்டிப் பெற்றுக் கொண்டார்.[8]"

தத்துவவிளக்கநூலாசிரியர் சம்பந்தசரணாலயர் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அவதரித்த சீர்காழியிலே தோன்றினார் எனக்கொள்ளத்தக்க வகையில் சம்பந்தரை ஆட்கொண்ட சீர்காழியில் எழுந்தருளியிருக்கின்ற பிரமபுரீஸ்வரர் உடனுறை திருநிலைநாயகியே சிவசத்தியாகக்கொண்டு பதிதத்துவத்தை விளக்கியுள்ளமை காணத்தக்கது. குறிப்பாக பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளுண்மையை விளக்கும் போது "எய்தும் பொருள் ஒருமூன்று பதி பசு பாசம் என்றே, மெய் தந்த ஆகமம் கூறும் அவற்றினுள் வெங்குருகுவாழ், மைதங்கு கண்டன் பதி பசு என்பது அணுக்கள் மற்றுக் கைதந்த பாசங்களானவை ஆணவம் மாயையுங் கன்மமுமே (தத்துவவிளக்கம் 10) இதில் வெங்குருகு எனப்படும் சீர்காழிப்பகுதியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைப் பதியாகக குறிப்பிட்டு ஏனைய பசு, பாசங்கள் காட்டப்பட்டுள்ளன.

இதுபோன்று சிவசத்தியின் அம்சமாக உள்ளதும், ஆணவம் முதலிய பாசங்களைத் தொழிற்படுத்துவதாகிய திரோதானசத்தியைக் (ஆதிசத்தியைக்) குறிப்பிடும்போது "ஒடுங்கிய பாசத்தொகை ஒரு மூன்றும் உறுந்தொழிலில், துடங்கிய போதில் துணைமயில் தோணி புரத்து உறையும், விடங்கெழுகண்டர் தம்சத்தியின் ஏவலின் மற்றதுவும், படர்ந்தெழுபாசம் பாசம் என்றார் அவை ஊக்கஞ் செய்பான்மையரே. (தத்துவவிளக்கம் 23) என்றார். இதன் வழி சர்வசங்காரகாலம் எனப்படும் முற்றழிப்புக் காலத்தில் ஆன்மாவோடு ஒடுங்கிச் செயலற்று நின்ற மூவகைப் பாசமும் தத்தம் தொழிலைத் தொடங்கியபோது தோணிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுடைய சிவசத்தியினது, ஆன்மாக்களை பற்றிய அந்த மும்மலங்களுக்கு அநுகூலமாய் நின்று அவற்றை ஏவுதலினால் உபாசாரமாக அதனை முதிர்ந்து எழும் திரோதாயி மலம் என்றும் கூறுவர் என்றார்.

இங்கு உரையாசிரியர் ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் சிவபக்த விலாசம், சிவதருமோத்திரம், நிச்சுவாசகாரிகை, தேவிகாலோத்தரம், தைத்திரியோபநிடதம் முதலான வடமொழி மற்றும் சிவஞானசித்தியார், திருக்குறள், காளகஸ்திப் புராணம், திருமந்திரம் முதலான தமிழ்மொழி நூல்களை மேற்கோளாகத் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தத்துவ விளக்கமும் தத்துவப்பிரகாசமும்

சம்பந்தசரணாலயர் இயற்றிய தத்துவவிளக்கம் என்ற இந்நூலைத் தழுவி தமிழிலும் வல்லவனும் இராட்டிரகூட மன்னனுமாகிய போஜன் தத்துவப் பிரகாசம் அல்லது தத்துவப்பிரகாசிகை என்ற நூல் செய்தான் என்பர். இத்தத்துவப்பிரகாசம் சிவாமங்களின் சார்புநூல்களில் ஒன்றாக உள்ள அஷ்டப்பிரகரண நூல்களில் முதலாவதாக

வைக்கப்பட்டுள்ளது. தத்துவவிளக்கத்தின் 51 செய்யுள்களையும் விரித்து தத்துவப்பிரகாசிகை 76 சுலோகங்களால் விளக்குகின்றது. இந் நூலும் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையைக் குறிப்பிட்டாலும் தத்துவம் என்ற சொல்லால் போஜமன்னன் சட தத்துவங் களையே குறித்துக்காட்டினார். மேலும் தத்துவ விளக்கத்தின் உரையாசிரியர் ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் தத்துவவிளக்கச் செய்யுளைத் தழுவி எழுதப்பட்ட தத்துவப்பிரகாச சுலோகங் களைச் செய்யுள் தோறும் வரையப்பட்ட உரையின் இறுதிப்பகுதியில் சேர்த்துள்ளார். இவ்வகையில் தத்துவவிளக்கத்தின் முப்பத்தைந்து செய்யுள்களுக்கான தத்துவப்பிரகாசிகையின் முப்பத்தைந்து சுலோகங்கள் எடுத்துக் காட்டி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் தத்துவ விளக்கத்தைத் தழுவி தத்துவப்பிரகாசிகை எழுதப்பட்டது என்பதை போஜமன்னன் எந்த ஒரு சுலோகத்திலும் எடுத்துக்காட்டவில்லை என்பதுடன் சிவாகமத்தைத்தழுவி நூல் செய்த மையை எடுத்துக்காட்டுகின்றார். "யாதொரு போஜ தேவருடைய மனத்தில் எல்லாத் தத்துவசமூகமும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் பிரகாசித்ததோ அத்தகைய போஜதேவர் சிவாகமங்களின் சாரமான ஒப்பற்ற தத்துவப்பிரகாசம் என்னும் நூலைச் செய்தனர் எனக்கூறப்பட்டுள்ளது[9].

### தத்துவவிளக்கத்தினதும் உரையினதும் சிறப்பம்சங்கள்

தத்துவவிளக்க நூலுக்குரிய சிறப்புப்பாயிரம் சிவஞானபோதம் போன்ற நூலுக்கு உள்ளது போலத் தனிச்செய்யுளால் அமையவில்லை. எனவே உரையாசிரியர் ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் சிறப்புப்பாயிரம் என்ற பகுதியில், அப்பாயிரத்தில் உள்ளடங்கவேண்டிய விடயங்கள் தத்துவவிளக்கச் செய்யுள்களில் வருவதை எடுத்துக் காட்டியுள்ளார். சிறப்புப்பாயிரத்தில் இடம்பெற வேண்டிய செய்திகள் யாவை என்பது இலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ளது. ஆக்கியோன் பெயரே வழியே எல்லை, நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே, கேட்போர் பயனோடாய் எண்பொருளும், வாய்ப்பக் காட்டல் பாயிரத்தியல்பே,"[10] என்ற வகையில் தத்துவவிளக்கத்தின் சம்பந்தசரணாலயர் துதியாக இடம்பெறும் "எம்பந்த" எனத்தொடங்கும் செய்யுளில் ஆக்கியோனாகிய சம்பந்தசரணாலயர் பெயர் "சம்பந்த சரணாலயன் தன்பாதஞ் சந்ததமும் நைந்துருகிச் சிந்தை செய்வாம்" எனவும், நூற்பெயர் "தத்துவவிளக்கம் நவின்ற நாவன்" எனவும் கூறப்பட்டது. தத்துவவிளக்கத்தின் மூன்றாவது பாடலிலே வரும் "சீரார் கவிதைத் திருவாய்மலர்ந்த சிவாகமம் கற்று ஆராய்வது வடசொல்பயின்றார்க்கு எளிதாம் அம்மொழியைச் சாராதவரும் தத்துவஞானம் தலைப்படுதற்கு ஓரார் தமிழ்ச்செய்யுளால்" என்னும் திருச்செய்யுளினால் சிவாகமங்களை முதல் நூலாகக்கொண்டு இந்நூல் வழிநூலாகச் செய்யப்பட்டது என்பதால் வழியும், இந்நூல் செய்யப்பட்ட காரணம் வடமொழிதெரியாதவர்கள் பதி, பசு, பாசம் என் கின்ற முப்பொருள் உண்மையை உணர்தலாகிய மெய்யுணர்வு என்னும் தத்துவஞானம் அடைவ தற்கும், "தமிழ்ச் செய்யுளால்" எனக் கூறுவதனால் தமிழ் வழங்கும் நிலமே இதனுடைய எல்லை என்பதும், சரியை, கிரியை, யோகம் எனவரும் மூன்று பாதங்களிலும் மேம்பட்ட ஞானபாதத்தை கூறும் தத்துவவிளக்கம் அந்நூல்களில் மேம்பட்டது ஆகையினால் அந்நூல்களைக் கற்றபின்னரே இந்நூலைக் கற்கவேண்டும் என்பதனால் யாப்பும், "எய்தும் பொருள்" எனத் தொடங்கும் பத்தாம் செய்யுளில் பதி, பசு, பாசம் என்கின்ற முப்பொருள் இலக்கணங்களையே இந்நூல் கூறுகின்றது என்பதனால் நுதலிய பொருளும், இருவினையொப்பு மலபரிபாகம் உற்றவரே இந்நூல் கேட்டற்குரியர் என்பதால் கேட்போரும், "பவமேயநெறி" எனத் தொடங்கும் இறுதிச்செய்யுளில் "சிவமேவுவர்" என்று கூறுகின்றமையால் நூலினது பயனும், இவர் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் காலத் தவராதலின் காலமும், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் முதலிய அறிஞர் சபையில் ஏறினமையாற் களனுமாகிய பதினொன்றும் இந்நூலுக்குச் சிறப்புப்பாயிரமாக அமைகின்றன.

வடமொழியிலுள்ள மூலாகமங்கள் இருபத் தெட்டில் உள்ள சரியை முதலிய நான்கு பாதங் களில் ஞானபாதமே சித்தாந்தம் எனப்படும். சிவஞானசித்தியார் இதனை "சிவாகமம் சித்தாந்த மாகும்" எனக் குறிப்பிடுகின்றது. இச்சித்தாந்தம் எனப்படும் ஞானபாதப்பொருள் ஒன்றாயினும்,

கேட்போரின் பக்குவத்திற்கேற்ப நூலாருந்தநி முறையில் கூறப்பட்டுள்ளதால், இருபத்தெட்டு ஆகமங்களுள் ஒவ்வோர் ஆகமத்தை தமக்குப் பொருளாக எடுத்து ஐக்கியவாத சைவம், பாடாணவாதசைவம், பேதவாதசைவம், சிவசமவாதசைவம். சங்கிராந்தவாத சைவம், ஈசுர அவிகாரவாத சைவம் என்னும் அகச்சமயங்கள் முதலியவைகளுக்கு பொருள் கொள்ளுமாறு செய்து, சைவசித்தாந்தத்திற்கு உண்மைப்பொருள் அல்லது நேர்ப்பொருள் கொள்வதற்கு முடியாத வாறு மயங்கவைப்பதாக இருப்பதனால் தமிழ் மொழியில் எழுந்த இத் தத்துவவிளக்கம், அவ் இருபத்தெட்டு ஆகமங்களின் சாரமாய் உள்ள பதி, பசு, பாசங்களின் இலக்கணங்களை மிகத்தெளிவாக, மயக்கமின்றி உணர்த்தி சிவானுபவமுடைய ஞானாசிரியன் மூலம் சிவதீட்சை முதலிய சைவ சம்ஸ்காரங்களைப்பெற்றுத் தன்னை ஓதல், ஓது வித்தல், கேட்டல், கேட்பித்தல், சிந்தித்தல் என்னும் ஐவகை ஞானபூசையின் வாயிலாகத் தொடர்ந்து பக்குவர்களாகிய சீடர்களை ஆணவ மலத்தில் நின்று நீக்கி சிவாநுபோக நிலையிற் செலுத்தவல்லதாகும்.[11] தத்துவவிளக்கம் போலவே சிவஞானபோதமும் ஞானபாதத்தின் பொருளில் ஏற்பட்ட மயக்கத்தினைப் போக்குவதற்கு, ஸ்ரீ கண்ட உருத்திரால் நந்தியம்பெருமானுக்கு உபதேசிக்கப்பட்டு குருசீட முறையில் இறுதியாக மெய்கண்டாருக்கு உபதேசிக்கப்பட்டமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

சம்பந்தசரணாலயர் துதியாக வரும் முதலாவது பாடலில் சம்பந்தசரணாலயரின் வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அவர் அருளிய தத்துவவிளக்கம் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிஷ்டை என்ற வகையில் பரஞானமாகிய சிவஞானத்தைப்பெறுவதற்கு உபகாராமாக இருத்தலின் அந்நூலை அருளிச்செய்த சம்பந்தசரணாலயர் (சிவ)ஞான நன்முனிவர் எனப்பட்டார். மேலும் உரையாசிரியர் ஸ்ரீ காசி வாசி செந்திநாதையர் சிவதருமோத்தர ஆகமத்தை சான்று காட்டி சிவஞானநூலை அருளிச் செய்தார் அடையும் பயனை விளக்குகின்றார்.

"சிவஞானபுஸ்தகத்தைக் கொடுப்பவன் அச்சிவஞான புஸ்தகத்தில் எவ்வளவு எழுத்துக் களுண்டோ, அத்துணை ஆயிரம் கற்பம் மகா சிவபுரத்தின்கண்ணே வசிப்பான்; தனக்கு முன்னும் பின்னுமுள்ள பத்தும்பத்துமாகிய இருபது குலத்தினரையும் மகாசிவலோகத்திருத்தி தானும் அதனை அடைகின்றான்" என்று சிவதருமோத்தராகமம் கூறியவாறு, சிவ ஞானத் தமிழ்வேதத்தை எழுதவல்ல பற்பலர் பதினாறாயிரம் திருக்கூட்டத்துள்ளே உள்ளவராக இருக்கவும், அதிதீவிர சத்தினிபாதமுற்று நின்ற திருஞானசம்பந்தப்பெருமான் நன்மாமனாராகிய சம்பந்தசரணாலயரே அச்சிவஞானத் தமிழ் வேதத்தை எழுதும்பேறு பெற்றவர் ஆகையினால் "எழுதுமறை எழுதும் பேறு நம்பன் அருளதனால் பெற்ற ஞானநன்முனி என்று கூறப்பட்டார்.[12]

தத்துவவிளக்கத்தின் முதலாவது செய்யுள் "சித்தத்து உவந்து எமக்கு இன்பம் பட" எனத் தொடங்குகின்றது. தத்துவவிளக்க ஆசிரியர் "எமக்கு இன்பம் பட" என்று உரைத்ததை உரையாசிரியர் "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என திருமூலர் கூறியதை எடுத்துக்காட்டி, பெரியோர் தாம் அடையும் இன்பத்தை உலகினரும் பெற வேண்டும் என்ற கருணைத் திருவுள்ளத்தினால், தன்மை முன்னிலை படர்க்கை என்ற மூவிடத்திலும் உள்ளரையும் உளப்படுத்தும் பொருட்டு "எனக்கு இன்பம் பட" என்று கூறாது "எமக்கு இன்பம் பட" என்று அருளிச் செய்தார் என்கின்றார்.[13] மேலும் ஆன்மா பெத்தநிலையில் எவ்வாறு இன்பத்தை அனுபவிக்கின்றது முத்திநிலையில் எவ்வாறு இன்பத்தை அனுபவிக்கின்றது என்ற ஆராய்ச்சியில் ஆன்மா பெத்தநிலையில் மலங்களோடு சேர்ந்திருந்தது; முத்திநிலையில் மலங்களிலிருந்து விடுபட்டு இறைவனது சிவானந்த இன்பத்தை அனுபவிக்கின்றது என்ற கருத்தை மட்டும் கூறுவதில் சித்தாந்த அறிஞர்கள் திருப்தியுறுகின்றனர். அதற்குமேல் முத்தியடைந்த ஆன்மா சொரூபநிலையில் உள்ள சிவத்துடன் இணைந்து ஆனந்தத்தை அனுபவிக்கின்றதா அல்லது தடத்த நிலையிலுள்ள சிவத்துடன் ஆனந்தத்தை அநுபவிக்கின்றதா என்ற சூக்கும விசாரணை எவையும் அவர்களிடம் இருப்பதில்லை. சுவாமி ஞானப்பிரகாசர் ஆகமங்களின் சார் பில் இறைவன் தடத்தநிலையில் செய்யும் பஞ்சகிருத்தியங்களுக்கு உதவியாக ஆன்மா

பஞ்சகிருத்தியம் செய்யும் என்ற கருத்து, எவ்வித சூக்கு விசாரணையும் இன்றிச் சிவஞானமுனிவர் உட்பட்ட சித்தாந்த அறிஞர்கள் மறுதலித்தமை நன்கு அறியப்பட்டதொன்று. இனி ஆனந்தம் அல்லது இன்பம் சார்பில் செந்திநாதையரின் கருத்து ஆராயத்தக்கது. ஆனந்தம் அல்லது இன்பம் என்பது உயிர்கள் மலங்களோடு சேர்ந்த பெத்த நிலையில் பிரகிருதியில் உள்ள சாத்விக குணம், ஆன்மாவில் மேம்பட்டு விளக்கும் விளக்கமே உலக இன்பமாகக் கூறப்படும். முத்தி நிலையில் ஆன்மாவிற்கு வேறாக சிவத்தின் இடத்திலுள்ள முற்றுணர்வு முதலிய எண்குணங்கள் ஆன்மாவில் மேம்பட்டு விளங்கும் விளக்கமே பேரின்பம் எனப்படும் சிவானந்தமாகக் கூறப்படும். இதனால் இறைவனுக்குரிய சர்வஞ்ஞத்துவம், சர்வகர்த்திருத்துவம் முதலிய ஆற்றல்கள் ஆன்மாவிடத்தும் வருதல் குறிப்பிடத்தக்கது. செந்திநாதையர் இதனை "ஆன்மாவுக்கு வேறாய் சிவத்தின்கண்ணே உளவாகிய முற்றுணர்வு முதலிய எண்குணங்களையும் அடக்கிநின்ற சர்வஞ்ஞத்துவ, சர்வகர்த்திருத்துவம் என்பன அவ்வான்மாவின்மாட்டு மேம்பட்டு விளங்கும் விளக்கமே சிவானந்தப் பேரின்பமாம்." என்றார்.[14] இதற்கு ஆதாரம் சிவபெருமானைப் போல முக்தராயினோரும் சர்வஞ்ஞாதி குணங்களுடையராகின்றார் என்று சிவதத்துவவிவேகமும், எண்குணங்களாகப் பகுக்கப்படும் பேரறிவுப் பெருந்தொழில் ஆன்மாவில் விளங்குதல் பற்றியே. "நட்டதே சிற்றறிவிற் பேரறிவு" என்றும். "உன் றன்குமிரண் டென்குலமிரண்டுங் குறுகிடா வண்ணம் இன்பமாய்" என்றும் பெரியோர் கூறியிருத்தல் காணலாம்.[15] இதனால் சர்வஞ்ஞத்துவம், சர்வகர்த்திருத்துவம் பெற்ற ஆன்மா செயலாற்றக்கூடாது. அது இறைவன் ஆணை வழியும் நிகழக்கூடாது எனக் கூறுவது சித்தாந்த அறிஞர்களின் பத்தி உணர்வே அன்றி அளவையியல் மற்றும் அனுபவ விளக்கமாக அமையாது என்பது நன்கு புலப்படும்.

### தாடலை முத்தி

சைவசித்தாந்த முத்தியின் இயல்பினை திருவருட்பயன் தாடலை என்றும், ஏகம் என்றும் குறிப்பிடுகின்றது. இதனது வெளிப்படையான பொருள் ஆன்மா இறைவனது தாளை அல்லது திருவடியை அடைந்து பேரின்பத்தை அனுபவிக்கும் என்பதாகும். அதாவது தாள். தலை என்னும் இரு சொற்கள் தாடலை என்னும் ஒரு சொல்லாய் அத்துவிதப்பட்டு இணைந்திருப்பது போல, முத்திநிலையில் ஆன்மாவும் சிவமும் இரண்டற்ற வகையில் ஏகனாய் இருத்தல் என்பதாகும்.[16] ஆனால் இதனது நுட்பப்பொருள் தாள் என்பது இறைவனது திருவருளாகிய சத்தியையும், தலை என்பது ஆன்மாவையும் குறிப்பது. இங்கு தாள் என்கின்றபோது இறைவனது இரு தாள்களையும் அதாவது இறைவனது வலது, இடது திருவடிகளைக் குறிக்கும். அவை முறையே ஞானசத்தி, கிரியாசத்தி என்பவற்றைச் சுட்டுகின்றது. எனவே ஆன்மா இறைவனது திருவருளாகிய சத்தியுடன் கலத்தல் வழி, சிவத்துடன் அத்துவிதப்பட்டு அநந்நியமாக - ஏகமாக இருத்தல் என்பதையே தாடலை என்ற சொல் எனக்குறிக்கின்றது. இக்கருத்தினைத் திருமூலர் திருமந்திரத்தில் "காலுந்தலையும் அறியார் கலதிகள், காலந்தச் சத்தியருள்என்பர். காரணம், பாலொன்று ஞானமே பண்பார் தலை உயிர்" என்றும், (திருமந்திரம், 2398) சிவனாரது வலது திருவடி ஞானசத்தி, இடத் திருவடி கிரியாசத்தி என வாயுசங்கிதையும், தெற்கு முகமாக வீற்றிருக்கும் ஆசாரியர் சீடனை எதிர்முகமாக்கி தமது பாதமிரண்டையும் சிவசத்திரூபமாகக்கொண்டு அச்சீடனுடைய சிரசு முதலியவற்றிலே அத்திருவடியை வைக்க என இரௌரவாகமமும் குறிப்பிடுதல் காணலாம். இக்கருத்தனை மணங்கொண்டு ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர்.

"ஒரு தாய்க்கு குழந்தையிடம் உள்ளதாகிய அருவாகிய அன்பினை பிறர் அறியுமாறு வெளிப்படுத்தும் அவ்வன்பின் உருவாகிய முலைப்பால் அக்குழந்தையைக் காண்பதற்கு முன் இல்லாது இருந்து பின் உள்ளதாக இருப்பது போல, நீரின்கண் நிழல் போல உயிர்களிடத்துப் புலப்படாது நின்ற பிரமபுரீசராகிய பரம் பொருள் ஸ்ரீ ஞானசம்பந்தமூர்த்திநாயனார் என்ற ஆசாரிய வடிவம் கொண்டு எழுந் தருளிவந்து சம்பந்த சரணலாயமுனிவர் என்னும் இந்நூலாசிரியரது சிரசின்மீது திருவடிசூட்டுதலாகிய விஞ்ஞான தீட்சையைப் புரிந்தருளினார் ஆதலின் "தாடலை போல் கூடியவை தானிகழ வேற்றின்பக் கூடலை

நீ ஏகமெனக் கொள்" என்னும் திருவாக்கிற்கு இயைய பிரமபுரீசப்பெருமானுடைய ஞானசத்தி, கிரியாசத்தி என்னும் இரண்டும் திருவடிகளைச் சம்பந்தசரணலாயமுனிவர் தம்முடைய ஞானசத்தி கிரியாசத்திகட்கு வியாபகமாகக் கொண்டு, தாடலைபோல் அடங்கித் திருவருள்வயத்தவராய்.[17] என்று உரைவரைந்துள்ளார்.

### சிவனடியார் பெருமை

சிவனடியார் பெருமையினை திருமுறைகள், பெரியபுராணம், திருவுந்தியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார் உட்பட்ட நூல்கள் பெரிதும் சிறப்பித்துக் கூறுகின்றன. தத்துவவிளக்க நூலும் கொச்சைவயம் எனப்படும் சீர்காழிப்பதியின் இறைவனது அன்பராகிய அடியவர்கள், முயன்று பெற்றதிரவியங்களைக்காட்டிலும், உறவினர்களைக் காட்டிலும், சிறந்த உத்தமரானவர்கள் சிவனடியார்கள் எனக்கூறுகின்றது. வேதங்களின் அடிப் படையில் பல சாதிகள் கூறப்பட்டாலும் உண் மையில் சிவனடியார்களுக்கு சாதி, ஆண்டி அரசன் என்ற வேறுபாடு இல்லை என்பதை உபநிடதங்களே வலியுறுத்துகின்றன. இதனை சண்டாளனேனுஞ் சிவன் என்னும் மொழியைச் செப்புவானாயின், அவனொடுண்க" என முண்ட கோபநிடதம் கூறுகின்றது. இச்செய்யுளுக்கு ஸ்ரீசெந்திநாதையர் உரையெழுதும்போது. "தேவருள்ளும், அரசருள்ளும், அரக்கருள்ளும், யக்சருள்ளும், கந்தர்வருள்ளும், நாகருள்ளும், முனிவருள்ளும், மானிடருள்ளும், பிராமணருள்ளும். சத்தியருள்ளும். வைசியருள்ளும், சூத்திரருள்ளும், சங்கரஜாதியருள்ளும். மாகாத்துமாக்களாகிய சிவனடியார் இருக்கின்றார்கள். இவர்களுக்கு எல்லாம் வர்ணாச்சிரமங்களின் கட்டுப்பாடு இல்லை. அந்தச்சிவபக்தர்களாகிய இவரெல்லாம் மாகேசுவரர்களாகக் கொள்ளப்படுகிறார்கள். அவரெல்லாம் அதிவர்ணாச்சிரமிகளென்று சமஸ்த வேதாகமங்களினுத் ஒப்புக்ொள்ளப்படுகின்றர்கள்" என்று அடியார் பெருமையை ஸ்காந்தபுராண உபதேசகாண்டம் கூறுகின்றது" என்பதை எடுத்துக்காட்டியுள்ளார்.[18] இக்கருத்துப்பட அப்பர் சுவாமிகளும் "சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து தரணியொடு வானாளத் தருவரேனும், மங்குவார் அவர் செல்வம் மதிப்போம் மல்லோம் மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில், அங்கமெல்லாங் குறைந்தழுகு தொழுநோயராய் ஆவுரித்துத் தின்றுழலும்புலையரேனுங், கங்கைவார்சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர்கண்டீர் நாம்வணங்குங் கடவுளாரே" (திருமுறை6,95:10) என அருளியிருத்தல் காண்க.

### தத்துவிளக்கமும் தத்துவஞானமும்

தத்துவவிளக்கம் என்பதில்வரும் "தத்துவம்" என்ற சொல்லிற்கு உண்மைப்பொருள், மெய்ப்பொருள், உள்ள பொருள் என்று பொருள் உரைப்பர். "உண்மை" என்பது உள்ளது எனப்பொருள்படும். இவ்வகையில் நிலைத்த தன்மை இல்லாத பொருள்களுக்கு இடையில், நிலையான உள்பொருள்கள் பற்றிய ஆராய்ச்சியைத் தத்துவம் என்று குறிப்பிடலாம். சைவசித்தாந்த மரபில் "தத்துவம்" என்பது சடதத்துவம் முப்பத்தியாறு என்ற பொருளிலே தான் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது. எனினும் உண்மைப்பொருளாகிய பிரமப்பொருள் அல்லது சிவத்தைக் குறிப்பதற்கும் இத் "தத்துவம்" என்ற சொல் பயன்படுத்தப்படுத்தப்படுகின்றது. வடமொழியில் உள்ள தத்துவப்பிரகாசத்தின் 73 ஆவது சுலோகம் எல்லா உயிர்களுக்கும் போகத்தைக் கொடுத்துக்கொண்டு பிரளயகாலம் வரை எந்த ஒரு பொருள் இருக்கின்றதோ, அது "தத்துவம்" எனவும் அந்தக் காரணத்தினால் சரீரம், கடம் முதலானவை தத்துவமாக ஆவதில்லை எனவும் கூறகின்றது.[19] இங்கு தத்துவம் என்பது சடத்துவத்தைக் குறிப்பதாகின்றது.

மேலும் தத்துவம் என்பதை இன்னொரு வகையில் நோக்கின், தத்துவம் என்பது தத்+துவம் அதாவது, தத் - அது, துவம் - தன்மை (பிரபுத்துவம், சகோதரத்துவம் என்னும் சொற்கள் வழங்குதல் காண்க) துவம் என்ற விகுதி பண்புப்பொருள் பயத்தலின் தத்துவம் என்ற சொல் "அதன் தன்மை" எனப் போருள்படும். "அது" என்ற சுட்டுச்சொல் சமயந்தோறும் வேறு வேறு பொருளைக் குறிக்கும் ஆதலின் பொருள் தன்மைகளை ஆராய்ந்து மெய்மையினை நிலைநாட்டும் அறிவுக்கலைக்குத் தத்துவம் என்ற குறியீடு வழங்கப்பட்டிருக்க முடியும். திருவள்ளுவரும் தத்துவம் என்பதற்கு மெய்ப்பொருள் எனவும், தத்துவஞானம் என்பதற்கு மெய்யுணர்தல் எனவும், குறிப்பிட்டுள்ளார்.[20] இதனை " எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு"

(திருக்குறள், 355) என்று குறிப்பிடுதல் இங்கு நோக்கத்தக்கது. தத்துவஞானம் தான் தலையாய அறிவு என்ற வகையில் சித்தாந்த நூல்கள் பிரமப்பொருள் அல்லது சிவம் பற்றிய அறிவையே உயர்ந்த அறிவாகப் பதிஞானமாகச் சுட்டுகின்றன.

அடுத்து, விளக்கம் என்பது உண்மை விளக்கம், மெய்ஞ்ஞான விளக்கம் என்பது போல இந்நூல் பதி, பசு, பாசம் என்கின்ற அநாதி நித்திய மெய்ப் பொருளாகிய உண்மைத்தத்துவங்களை வடமொழி வேத, சிவாகமங்களிற்கு மாறுபடாது தமிழ்மொழியில் விளக்குவது என்ற பொருளில் "தத்துவ விளக்கம்" என்றார். மேலும், வள்ளுவர் தத்துவம் என்பதற்கு மெய்மை எனக்கொண்டு தத்துவஞானம் என்பதற்கு மெய்யுணர்தல் என்று பொருள் கூறியிருந்தார். இதனைப் பரிமேலழகர். "அஃதாவது, பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரித ஐயங்களானன்றி உண்மையான் உணர்தல் இதனை வடநூலார் "தத்துவஞானம்" என்பஎனக் குறிப்பிடுதல் காண்க.[21]

மேலைத்தேய மெய்யியல் அறிவின் விருப்பாக அமைய, இந்திய மெய்யியல் உண்மையை உணர்தல் அல்லது தரிசித்தல் (காண்டல்) என்ற வகையில் அமைந்திருத்தல் காணலாம். இவ்வகையில் தத்துவவிளக்க நூல், இந்தியமெய்யியலின் குறிக்கோளாகிய தத்துவஞானம் எனப்படும் மெய்யுணர்தலையே உயர்ந்த குறிக்கோளாகக் கொண்டுள்ளது என்பதை நூலாசிரியர் "தத்துவஞானம் தலைப்படுதற்கு ஓரார்" என்று விளக்கியுள்ளார் (தத்துவவிளக்கம், 3). இதன் விளக்கம் வடமொழியைக் கற்றவர்கள் சிவபெருமான் அருளிச்செய்த சிவாகமங்களைக்கற்றுத்தத்துவஞான உண்மைகளை அறிந்து கொள்வர். அவ்வாறன்றி அம்மொழியைக் கற்காதவர்கள் தத்துவஞானம் எனப்படும் உண்மை அறிவைப் பெறும்பொருட்டு தத்துவவிளக்கம் போன்ற தமிழ் நூல்கள் செய்ததாகக் கூறுவதனால் இதனை அறியலாம். இக்கருத்தினை "சீரார் கயிலைத் திருவாய்மலர்ந்த சிவாகமம் கற்று, ஆராய்வது வடசொல் பயின்றார்க்கு எளிது அம்மொழியைச், சாராதவருந் தத்துவஞானந் தலைப்படுதற்கு, ஏர் ஆர் தமிழ்ச் செய்யுளால் மையல் தீர எழுதுவனே" (தத்துவவிளக்கம் 3) என்ற பாடல் தருகின்றது.

திருஞானசம்பந்தர் அவதாரத்தினால் பாண்டிய மன்னன் கூன் நிமிர்ந்ததுடன் (கூன் பாண்டியன் நின்றசீர்நெடுமாறன் என்ற பெயர் பெற்றதுடன்) வேதத்தின் கூனும் நிமிர்ந்தது. இக்கருத்தினை "எழுதாமறையும், வழுதிதன் கூனும் நிமிரவந்தாண்டான்" (தத்துவவிளக்கம், 4) என்று அருளினர் சம்பந்தசரணாலயர், சேக்கிழார் சுவாமிகள் இதனைத் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் புராணத்தில், "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க" எனக் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

#### சந்தியாகாயத்திரி மந்திரம்

இருக்கு, யசுர், சாமம் அதர்வ வேதங்களிலும், பிருகதாரணியம் முதலிய உபநிடதங்களிலும் கூறப்படும்சந்தியாகாயத்திரிமந்திரத்தின்பொருளை சைவசித்தாந்தம் கூறும் செம் பொருளுடன் இணைத்து உரையாசிரியர் விளக்கியுள்ளமை வேறு நூல்களில் காணமுடியாத ஒன்று. சந்தியாகாயத்திரி மந்திரம் "ஓம் பூர் புவ ஸ்வ:, தத் ஸவிதுர் வரேணியம் /, பர்கோ தேவஸ்ய தீமஹி /, தியோ யோந ப்ரசோதயாத் //" என வருகின்றது. இம் மந்திரத்தின் பொருள் எந்த சிவசூரியனுடைய ஞானா, இச்சா, கிரியா சொரூப சக்தியினையானது எங்கள் ஞானா, இச்சா, கிரியைகளைத் தூண்டுகின்றதோ (உளுற்றுகின்றதோ), அந்த முக்கிய பொருளாகிய சிவசக்தி ஒளியை தியானிப்போம் ஆயினோம் என்பதாகும்.[22] மேலும் இம்மந்திரத்தில் சிவபிரான் தேவ எனவும், (தேவசவிதா என்பது சிவசூரியன், பதிப்பொருள் என்பதைக் குறிக்கும்) சிவசக்தி பர்க்கஸ் எனவும், ஆன்மாக்கள் "ந" எனவும், பாசம் ப்ரசோதயாத் எனவும் காட்டப்பட்டது. மேலும் ஆன்மதத்துவம் இருபத்தினான்கும் பூ: என்றும், வித்தியாதத்துவம் ஏழும் புவ: என்றும், சிவதத்துவம் ஐந்தும் ஸ்வ: என்றும் உணர்த்தப்பட்டுள்ளது.

"சிவப்பிரஹ்மத்தின் ஒளியினால் எல்லாம் பிரகாசிப்பனவாகின" என்று உபநிடதங்கள் கூறியவாறு, சூரியசந்திரர் முதலியவனைத்தும் தம்மிடத்தினின்றும் ஒளிபெற்றுப் பிரகாசிப்பன வேயாக, தமது பிரகாசம் அவ்வாறு பிறிதொன்றை வேண்டாது நித்திய சுத்த சுயம்பிரகாசமாய் (தானே ஒளிர்வதாய்) நிற்றலின், சிவபிரான் "தேவ"

எனப்படுவர். ஆதலின், தேவச விதா என்றதற்குச் சிவசூரியன் எனப்பொருள் கொள்ளப் பட்டது.[23] அதாவது உலகில்காணப்படும் பெரிய புறவிருளைச் சூரியக்கடவுள் கெடுத்துக் கண்ணுக்குக் காட்சி கொடுத்தாற்போல, உடம்பிலுள்ள உயிரின அகவிருளாகிய ஆணவமலச் சத்தியைக் கெடுத்து மெய்ப்பொருளை விளக்குதல் பற்றிச் சிவபிரான் சூரியனாகக் கூறப்பட்டார். மேலும் சூரியனுக்கு ஒளி உள்ளது போல, சிவனுக்குச்சக்தி உள்ளது என்பது பர்க்கஸ் என்று கூறப்பட்டது. இதனால் சிவசூரியன் (தேவசவிதா) என்றது பதிப்பொருளாகிய சிவத்தைக் குறித்தது. சீவான்மாக்கள் எண்ணிக்கையற்ற பல என்பதை உணர்த்த "ந" என்பது எங்களுடைய எனக்கூறப்பட்டது. பாசத்தை நீக்கி நல்வினை தீவினைகளிற் சிவசக்தி ஆன்மாக்களைத் தூண்டுவதனால் "ப்ரசோதயாத்" என்னுஞ் சொற்கொண்டு பாசமும் பெறப்பட்டது.[24] இதனைச் "சிவசூரியனுடைய சத்தியொளியினால் விளக்கப்பட்ட அறிவுக்கண்ணினால் சத்தியோடுகூடச் சிவத்தை ஆன்மா பார்க்கின்றான் அதனாற் பாசம் நீங்கிப்போயிற்று" என்று நிச்சுவாச காரிகை குறிப்பிடுகின்றமை காணலாம்.[25]

**தத்துவவிளக்கமும் சைவசித்தாந்த சாஸ்திரங்களும்**

தத்துவவிளக்கச் செய்யுள்கள் சிலவற்றை சிவஞானசித்தியார் உரையாசிரியர் மறைஞானசம்பந்தர், நிரம்பவழகியார், சிவப்பிரகாச உரையாசிரியர் மதுரைச் சிவப்பிரகாசர், பெருந்திரட்டுத் தொகுத்த தத்துவராயர், வெள்ளியம்பல வாணத் தம்பிரான் என்போர் எடுத்தாண்டு உரை எழுதியுள்ளமையைக் காணலாம். இவற்றுள் மறைஞானதேசிகர் தத்துவவிளக்கத்தின் ஒரு செய்யுளையும், நிரம்பவழகியர் ஒரு செய்யுளையும் எடுத்தாளுகின்ற அதேநேரம் மதுரைச் சிவப்பிரகாசர் எட்டுச்செய்யுள்கள் வரை தனது உரைக்கு ஆதாரமாகப் பல இடங்களில் எடுத்தாண்டமை குறிப்பிடத்தக்கது. உதாரணமாக, கலையில் நின்று மூலப்பிரகிருதி தோன்றும் என்பதை "வரும் குணவடிவாய் மூலப்பிரகிருதி கலையில் தோன்றி" (சிவஞானசித்தியார்:147) எனச் சிவஞானசித்தியார் குறிப்பிடுகின்றது. இதற்கு ஆதாரமாக நிரம்பவழகியர் "ஓதுங் கலையில் நின்று குயந்தரும் மூலப்பகுதியது உற்பவிக்குமாம்" (தத்துவவிளக்கம், 35) என்ற தத்துவவிளக்கச் செய்யுளைத் தருகின்றார். மேலும் புத்தி குணத்திலிருந்து தோன்றும் என்ற பௌஷ்கராகமக் கருத்தை அடியொற்றி "கூறிய மூலப்பகுதியில் தோன்றுங்குணம் அவைதான், தேறிய சாத்விக ராசத தாமதம் என்று செப்பும், மூன்று முக்குணம் ஒத்தவை முன்று உயர் இழி உற்று, ஏறியக்கால் புத்திதத்துவமாகும் என்று எண்ணுவர்" (தத்துவவிளக்கம், 46) எனக் குறிப்பிடுகின்றது. ஆனால் சிவஞானசித்தியார் புத்தி பிருகிருதியில் இருந்து தோன்றும் என்கின்றார். இதனைச் "சித்தமாம் அவ்வியத்தம் சிந்தனை அதுவுஞ் செய்யும் புத்தி அவ்வியத்தில் தோன்றி" (சிவஞானசித்தியார், சுபக்கம். 148) என்பதால் அறியலாம்.

மேலும், இறைவன் சகலர் முதலியோர்க்கு இருவினை ஒப்பு சத்திநிபாதம் நிகழும்போது குருவாய் வெளிப்பட்டு முத்தியை அருள்வான் என்பதில் சகலர்க்கு அருளும்போது மானிடவடிவம் தாங்கி அருளுவான் என்பதை சம்பந்தசரணாலயர், எண்ணும் வினைப்பயனாற் புவனந்தொறும் போகம் என்றும், நண்ணிவருஞ் சகலர்க் ஒரு கால் நயந்து அங்ஙனே, பண்ணிய கன்மந் தொலை ஒத்துழி சத்திபாதமுறக், கண்ணியலுங் குரு வாய்க் காழி வேந்தன் கதிதருமே. (தத்துவவிளக்கம், 18) என்று அருளிச்செய்ய சிவஞானபோத ஆசிரியர் மெய்கண்டார், "ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத் தம்முதல் குருவுமாய்தட தவத்தனில் உணர்த்த விட்டு அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே" (சிவஞானபோதம், 8 ஆம் சூத்திரம்) எனவும், "அஞ்ஞான அச்சகலருக்கு அக்குருவாய்- மெஞ்ஞானம், பின்னுணர்த்தும்" (சிவஞானபோத சூத்திரம் 8:2:1) எனவும் அருளியிருத்தல் காணலாம்.

இக்கருத்தினை போஜதேவரின் தத்துவப் பிரகாசம் "சிவபெருமான் குருமுகமாக எழுந்தருளி திரோதானசத்தியை நீக்குதலினால் ஏற்படும் சத்தினிபாதத்தினால் பரிபக்குவமுற்ற மலத்தையுடைய இந்த ஆன்மாக்களை (சிவானந்த) பரதத்துவத்திற் சேர்ப்பிக்கின்றார் என்று குறிப்பிடுகின்றமை காணலாம். இவ்வாறு தத்துவவிளக்கச் செய்யுள்கள் மற்றைய சாத்திர நூல்களுடன் ஒப்பிட்டு ஆராயத்தக்கன.

இற்றைவரை எமக்குக் கிடைத்த தமிழ் சைவ சித்தாந்த சாஸ்திர நூல்களில் சைவசித்தாந்தக் கருத்துக்களை ஒழுங்குமுறையில் தருகின்ற மிகப்பழைய சாஸ்திர நூல் இத்தத்துவவிளக்க மாகும். என்பதுடன் இந்நூல்திருஞானசம்பந்தரின் மாமனார் சம்பந்தசரணாலயரால் இந்நூல் இயற்றப்பட்டது என்பதனால் கி.பி 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்ததாக அறியப்படும் சம்பந்தசரணாலயர் வேறு என்பதும், இங்கு கூறப்படும் சம்பந்தசரணாலயர் காலம் கி.பி 7 ஆம் நூற்றாண்டு என்பதும் பெறப்படும். மேலும், தத்துவவிளக்கம் சைவசித்தாந்த சாஸ்திர நூல்களில் ஒன்றாக வைக்கத்தக்கது என்பதுடன் ஸ்ரீ காசிவாசி செந்திநாதையரின் உரை சைவசித்தாந்த நுண்பொருள்கள் பலவற்றைத் தருகின்றது என்பதை சந்தியா காயத்திரி மந்திரம் முதலியவற்றை சித்தாந்தத் தத்துவநோக்கில் விளக்கியுள்ளமையால் அறியலாம். தத்துவவிளக்கத்தைத் தழுவி தத்துவப் பிரகாசிகை எழுதப்பட்டது என்ற ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் கருத்து பொருத்தமுடையது.

**நிறைவுரை**

இக்கட்டுரையில் சம்பந்தசரணாலயர் அருளிய தத்துவவிளக்க நூலிலும், உரையிலும் வருகின்ற சில முக்கியமான விடயங்கள் எடுத்துக் காட்டப்பட்டன. தமிழில் எழுந்த சாஸ்திர நூல்களில் இதுவேபழமை யானது என்று கூறத்தக்கதாக உள்ளது. பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளுண்மைகளைக் கூறுவதனால் இது சிவஞானபோதம் போன்ற சாஸ்திரநூல்களோடு ஒப்பிட்டு ஆராயத்தக்கதாயினும், இந்நூலில் சிவஞான போதம் போன்று அளவையியல் கருத்துக்களின் அடியாக தர்க்கரீதியாக உண்மைகள் நிறுவப்படவில்லை. அதாவது காட்சி, அனுமான அடிப்படையில் உண்மைகள் நிறுவப்படாது ஆகமப்பிரமாணத்தின் அடிப்படையில் உண்மைகள் நிறுவப்படுகின்றது என்பதாகும். தத்துவவிளக்கம் சிவாகமங்களைத் தழுவிய வழிநூலாக உள்ளது போல் சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய வற்றை சிவாகமங்களின் வழிநூலாக சில சித்தாந்த ஆசிரியர்கள் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது. மிகப்பழமையான இத்தத்துவவிளக்க நூலை ஏன் மெய்கண்டசாஸ்திர நூல்களில் உள்ளடக்கவில்லை என்ற கேள்வி இங்கு அவசியமற்றது எனினும், கால அடிப்படையில் இத்தத்துவவிளக்கம் மெய் கண்டசாஸ்திர நூல்களுக்கு முற்பட்டது என்பதுடன் தேவார காலத்தைச் சார்ந்த நூலாக இருந்து பதி, பசு, பாச உண்மைகளைப் பொதுப்படக்கூறும் சாஸ்திர நூல்களிலிருந்து வேறுபட்டு, இங்கு தோணிபுரத்தில் உள்ள இறைவனைப் பதியாக்கொண்டு பாடுகின்றமையும், சந்தான மரபிலிருந்து வேறுபட்ட சமயகுரவர் மரபு சார்ந்த நூலாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும், வடமொழியில் இந்நூலைத் தழுவி எழுந்ததாகக் கூறப்படும் போஜதேவரின் தத்துவப்பிரகாசம், அத்வைதக் கொள்கைக்கு மறுப்பாக எழுந்தவகையில் நூலாசிரியரும் உரையாசிரியராகிய அகோராசிவாசாரியாரும் ஒரளவு தர்க்கக் கருத்துக்களின் அடிப்படை யில் முப்பொருள் உண்மைகளை நிறுவுகின் றமையும் தத்துவவிளக்கத்தையும் தத்துவப் பிரகாசத்தையும் இணைத்து ஆய்வுகள் வெளிவரவேண்டிய இன்றியமையாமையை உணர்த்துகின்றது. தத்துவவிளக்க நூலின் உரையாசிரியராகிய ஸ்ரீ காசிவாசி செந்தி நாதையர், சம்பந்தசரணாலயர் விளக்கிய முப்பொருளுண்மையை வடமொழி மற்றும் தமிழ்மொழி நூல்களை மேற்கோளாகக்கொண்டு உரை வரைந்துள்ளமையும், தத்துவவிளக்கச் செய்யுள்களின் மிக நுட்பமான சித்தாந்த உண் மைகள் பலவற்றையும் விளக்கியுள்ளமையும் குறிப் பிடத்தக்கது.

**அடிக்குறிப்புக்கள்**

*01.* *அருணாசலம் மு. தமிழ் இலக்கிய வரலாறு (பதினான்காம் நூற்றாண்டு) தமிழியல் ஆய்வு மற்றும் வெளியீட்டு நிறுவனம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2005,பக் 175,176.*

*02.* *மேலது. ப.177*

*03.* *மேலது. ப.176*

*04.* *மேலது. ப.190*

*05.* *முத்துத்தம்பிப் பிள்ளை. ஆ.(1902), அபிதான கோசம், நாவலர் பதிப்பகம், யாழ்ப்பாணம், ப.116.*

*06.* *மேலது. ப.116*

*07.* *செந்திநாதையர், ஸ்ரீகாசிவாசி, (1918) தத்துவவிளக்க மூலமும் ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் எழுதிய உரையும், சூரியோதய அச்சியந்திசாலை, மதுரை. ப.41.*

*08.* *மேலது. ப.10.*

*09.* *அஷ்டப்பிரகரணம் (முதல் மூன்று), (1981) திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை. ப.58.*

*10.* *கணேசையர், சி. (உரைவிளக்கக் குறிப்புக்கள்), தொல்காப்பியம் எழுத்ததிகாரம், திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1937, ப.6.*

*11.* *செந்திநாதையர், ஸ்ரீகாசிவாசி, 1918 மு.கு.நூ.ப.37.*

*12.* *மேலது. ப.9*

*13.* *மேலது. ப.1*

*14.* *மேலது. ப.2*

*15.* *மேலது. ப.7*

*16.* *ஞானகுமரன் நா.(2012) சைவசித்தாந்தத் தெளிவு, தூண்டி, யாழ்ப்பாணம். ப.179*

*17.* *செந்திநாதையர், ஸ்ரீகாசிவாசி, 1918, மு.கு.நூ. ப.6-7.*

*18.* *மேலது. ப.13*

*19.* *போஜதேவர், 1981, மு.கு.நூ. ப.57.*

*20.* *கந்தசாமி, சோ.ந. இந்திய தத்துவக்களஞ்சியம் (தொகுதி 1), மெய்யப்பன் பதிப்பகம் 2003, பக்.1-2.*

*21.* *கௌமாரிஸ்வாரி, எஸ். (பதிப்பாசிரியர்) திருக்குறள் பரிமேலழகர் உரை, சாரதாபதிப்பகம். சென்னை. 2010, ப.109.*

*22.* *செந்திநாதையர், ஸ்ரீகாசிவாசி, 1918, மு.கு.நூ. ப.53*

*23.* *மேலது. ப.53*

*24.* *மேலது. பக். 54-55*

*25.* *மேலது. ப.55.*